**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S. 210/2013**

2025—ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**D.W.1 மீனாட்சி சுந்தரம் வயது 70, த/பெ வெங்கடேசன்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

ராமலிங்கம் தன்னுடைய சகோதரர் ராஜேந்திரன் பெயரில் தான செட்டில்மென்ட் பத்திரம் ஏற்படுத்துவதற்கு முன்புதான் தாவா சொத்திற்கான பட்டா ராமலிங்கம் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் தானசெட்டில்மென்ட் எழுதுவதற்கு பின்புதான் பட்டா பெயர் மாற்றப்பட்டது. அந்த தான செட்டில்மென்ட் பத்திரம் இந்நீதிமன்றத்தில் சிவக்குமார் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்த போது எழுதப்பட்டது என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது.

2. மேற்படி வழக்கை வாதி சிவக்குமாரும் அவருடைய மனைவியும் விவசாய நிலம் என்றும், பிரிக்கப்படாத மனை பிரிவுகள் அல்ல என்று வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. அதற்கு முன்பு வரை இந்த தாவா சொத்து மனைபிரிவுகளாக மாற்றப்பட்டதற்கு ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி ஆதாரம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யப்பட்டுள்ளது.

3. மேற்படி தாவா சொத்து விவசாய நிலம் அல்ல என்பதை காண்பிப்பதற்காக அவருடைய சகோதரர் ராஜேந்திரன் என்பவருக்கு தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் மனைபிரிவுகள் என குறிப்பிட்டு எழுதி கொடுத்தார் என்றால் ராமலிங்கம் வங்கியில் மனை பிரிவுகளாகதான் வாங்கியுள்ளார். அதை பின்னிட்டு அவரும் அவர் தம்பிக்கு தானசெட்டில்மென்ட் எழுதிக் கொடுத்தார்.

4. ராமலிங்கம் வங்கியில் இடமிருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தில் மனை பிரிவுகளாக குறிப்பிட்டு கிரையம் பெறவில்லை என்றால் சரியல்ல. வங்கியில்

மனைபிரிவுகளாகதான் குறிப்பிட்டு அடமானம் வைத்தார்கள். நான் இவ்வழக்கிற்காக வாதி மனைப்பிரிவுகளாகதான் அடமானம் வைத்தார் என்றாலும், வங்கி ராமலிங்கத்திற்கு கொடுத்த கிரைய பத்திரத்திலும் மனைபிரிவுகளாக குறிப்பிட்டுள்ளது என்று இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. ராமலிங்கம் ராஜேந்திரனுக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மென்ட் பத்திரத்தில்தான் முதன் முதலாக மனைபிரிவுகள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் எழுதி கொடுத்த தானசெட்டில்மென்ட் பத்திரத்தில்தான் மனை பிரிவுகள் எண் 15 முதல் 20 வரை என குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றாலும், ஒவ்வொரு மனையின் நீளம், அகலம் மற்றும் ஜக்பந்தி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 6 மனைக்கும் சேர்த்து ஒரே ஜக்பந்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

6. எதற்காக இவ்வாறு எழுதினார் என்றால் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் இவ்வாறு எழுதினார் என்றால் வங்கியில் வீட்டு மனை என்றுதான் அடமானம் வைத்தார்கள். அதை பின்னிட்டுதான் நான் கிரையம் பெற்றேன். நான் வாங்கிய கிரைய பத்திரத்தில் மனை எண். 1 முதல் 20 மனை என்று குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்போது வங்கியில் கொடுத்த கிரைய பத்திரத்தினுடன் வரைபடமும் இணைக்கப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. இந்த வழக்கிற்காக நான் வங்கியில் கொடுத்த கிரைய பத்திரத்தில் மனை 1 முதல் 20 வரை என குறிப்பிடப்பட்டிருந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆகையால் இந்த தானசெட்டில்மென்ட் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தான செட்டில்மென்ட் பத்திரத்தின் அடிப்படையில்தான் என்னுடைய கிரைய பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய கிரைய பத்திரத்திலும் ஒவ்வொரு மனையின் நீளம், அகலம் மற்றும் ஜக்பந்தி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

8. நான் வாங்கிய கிரைய பத்திரத்தில் வரைபடம் இணைக்கப்பட்டிருந்ததா என்றால் இணைக்கப்பட்டிருந்தது. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தில் வரைபடம் எதுவும் இணைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது. நானும் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்த போதுதான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். ராமலிங்கம் பெயரில் வழக்கு இருந்தது உண்மைதான். ஆனால் அவரது தம்பி ராஜேந்திரன் பெயரில் வழக்கு எதுவும் இல்லாத காரணத்தால் நான் கிரையம் பெற்றேன்.

9. ஆகையால் நான் சொத்து கிரையம் பெற்ற போது வழக்கு நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியும் என்றாலும், தெரிந்து கொண்டே நான் கிரையம் பெற்றேன் என்றாலும் சரிதான். ஆகையால் தானசெட்டில்மென்ட் பத்திரமும், கிரைய பத்திரமும் உண்மையில் ஏற்படுத்தப்பட்டது அல்ல என்றாலும் இவ்வழக்கிற்காக நாமகாரணமாக ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. ஆகையால் மேற்படி 2 ஆவணங்கள் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. கல் கம்பம் நட்டு வேலி போட்டு தகர சீட்டு போட்ட கதவு போட்டு என் ஐக்பந்தி என்று குறிப்பிட்டுள்ளேன்.

10. நான் மேலே கூறியவாறு எந்த கல் கம்பம் மற்றும் வேலி, கதவு போடப்படாமல் கரம்பாகவே உள்ளது என்று சொன்னால் சரியல்ல. கல் கம்பம் நட்டு வேலி போட்டு தகர சீட்டு போட்ட கதவு போட்டு என் ஐக்பந்தி என்று குறிப்பிட்டுள்ளதை தற்போது வந்தாலும் பார்க்கலாம். மேற்படி தாவா இடத்தை பார்வையிட நீதிமன்றத்தில் மனு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனைப் பிரிவுகளாக இருந்தால் தாலுக்கா அலுவலகத்தில் தீர்வை வசூல் செய்ய மாட்டார்கள் என்றால் சரிதான்.

11. ஆனால் வாதிகள் இந்த தாவா சொத்தை அனுபவித்த காலத்தில் இருந்து தீர்வை செலுத்தியதாக நீதிமன்றத்தில் தீர்வை ரசீதுகளை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. இன்றைய தேதி வரையிலும் வருவாய் துறை ஆவணங்களில் தாவா சொத்து விவசாய நிலம் என்றுதான் வரையறுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி தரப்பில்

வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களிடமிருந்து இன்றுவரை தாவா சொத்தில் மனை பிரிவுகள் அமைப்பதற்கு எந்தவித அனுமதியும் வழங்கப்படவில்லை என்றும், யாரும் அனுமதி கோரி மனு அளிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டு கடிதம் கொடுத்துள்ளார் என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது.

12. ஆகையால் இந்த தாவா சொத்து வங்கியால் ஏலம் மூலம் கொண்டு வரப்பட்டது என்றாலும், அது சட்டப்படி செல்லாது என்றாலும் சரியல்ல. அது சட்டப்படி செல்லும். வாதிகள் முதல் முதலில் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்திலும் அது விளை நிலமாகதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. வங்கி தவறுதலாக தாவா சொத்தை ஏலத்தில் கொண்டு வந்து ராமலிங்கத்திற்கு கிரையம் கொடுத்ததால் தான் மேற்படி 2ம் பிரதிவாதியான வங்கி நீதிமன்றத்தில் ஆஜராகி தங்கள் தரப்பை எடுத்துரைக்கவில்லை என்றால் சரியல்ல.

13. 1 முதல் 3ம் பிரதிவாதிகளாகிய ராமலிங்கம், வங்கியும், ராஜேந்திரனும் இவ்வழக்கில் இன்றும் உள்ளார்கள் என்றால் சரிதான். இது தவறுதலாக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்பதால்தான் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல. ராமலிங்கம் காலத்திலும் அவர் விளை நிலமாகதான் அனுபவித்து அதற்கான தீர்வையும் அவர் செலுத்தி வந்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அவர் செலுத்திய தீர்வை ரசீதுகள் வாதிகள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

14. இந்த மனைபிரிவுகளில் இந்த தேதி வரை எந்த கட்டிடங்களும் கட்டப்படவில்லை என்றால் சரிதான். அதேப் போல் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்திலும் புஞ்சை விளை நிலமாகதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வீட்டு மனையாகதான் வாங்கினேன். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடந்ததாகவும் அதைப் பற்றி நேரடியாக எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். ஆனால் பத்திரம் மூலம் மேற்படி விவரங்களை பற்றி எனக்கு தெரியும்.

15. நான் 1ம் பிரதிவாதி மற்றும் 3ம் பிரதிவாதிக்கு பவ்யப்பட்டு அவர்களுக்கு ஆதரவாக நான் இந்நீதிமன்றத்தில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றாலும் வாதிகளின் தாவா தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi
District Munsif,
District Munsif Court,
Arni.